"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) மற்றும் தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2005) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2005 செப்டம்பர் 22]

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

திரு. துரைமுருகன்: ஒரு கருத்து. அதாவது, ஒரு சட்டமுன்வடிவு இப்போதுதான் அறிமுகம் ஆயிற்று. இதை உடனே இப்போதே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு அதி, அதி, அதி முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல இது. ஆகையால், இதற்காக விதியைத் தளர்த்தி இப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது நியாயமும் அல்ல. இதற்கு நீங்கள் அவகாசம் கொடுத்து இருக்கலாம். நாளைக்கு வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். நாளை மறுநாள்கூட எடுத்துக்கொள்ளலாம். Bill-க்கு ஒரு நாள் இருக்கிறது. எப்படியும் கொண்டுவந்துவிட்டீர்கள். ஆகையால், பேசித்தான் ஆகவேண்டும். ஆகவேதான் பேசப் போகிறோம். இன்றைக்கு எடுத்துக்கொள்வது என்றால், இதிலே இன்னும் சரியாக விளக்கமாக இல்லை. என்ன கேட்டு இருக்கிறார்கள்? சிண்டிகேட் கேட்டுக்கொண்டது. ஆகையால்... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீங்கள் பேசும்போது பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: எப்போது கேட்டார்கள்? என்ன கேட்டார்கள்? எத்தகைய அடிப்படையிலே? (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், உங்களுடைய கருத்தைச் சொல்லும்போது நீங்கள் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: Statement of objects எல்லாம் ஒன்றுமே இல்லை. Statement of objects and reasons-ல் அதையெல்லாம் விளக்கி மறுபடியும் Bill -ஐ introduce பண்ணலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள்.

[2005 செப்டம்பர் 22

திரு. துரைமுருகன்: அதனால் இன்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டாம். மற்றொரு நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன். இது முறையல்ல என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, தீர்மானம் நிறைவேறிவிட்டது.

திரு. ஜி. பழனிசாமி: நேற்று பேசும்போதுகூட, அலுவல் ஆய்வுக் குழுவில் இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு எடுத்துக்கொள்வதாக நாம் பேசவில்லை. இதை கடைசி நாள் எடுத்துக்கொள்வதாகத்தான் பேசியிருக்கிறோம். அதனால் அவகாசம் கொடுத்துப் பேசலாம். இதற்கு பெரிய அவசியமே கிடையாது இப்போது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அலுவல் ஆய்வுக் குழுவில் introduce பண்ணுவது என்று மட்டும்தான் பேசப்பட்டது. (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் : ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிற்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் ஏற்கெனவே அரசினர் சட்டமுன்வடிவுகள் . . . (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. துரைமுருகன் கேட்டதற்குச் சொல்லிவிடுகிறேன். 22-9-2005 வியாழக்கிழமை அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் என்பது நம்முடைய நிகழ்ச்சி நிரலிலே போடப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இருந்தாலும்கூட, நான் இவ்வளவு அவசரம் தேவையில்லை என்றுதான் கூறுகிறேன். நிகழ்ச்சி நிரலில் சட்டமுன்வடிவிற்கு எண்கூட கொடுக்கப்படவில்லை. அந்த இடத்தில் காலியாக விடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் இனிமேல்தான் நீங்கள் எண் போடப்போகிறீர்கள். அவ்வளவு அவசரமாக இதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன? எப்படியும் நிறைவேற்றுவது என்று வந்துவிட்டால் எப்போது வேண்டுமானாலும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம், நிறைவேற்றலாம். இன்னும் 4, 5 நாட்கள்

2005 செப்டம்பர் 22] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சட்டமன்றம் நடைபெற இருக்கின்றது. பிறகு எடுத்துக்கொள்ளலாம். இப்போது எடுக்கவேண்டிய அவசியம் என்ன? இப்போது எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, பிறிதொரு நாளில் இதை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அமைச்சர் அவர்களுடைய விளக்கம் சொல்வார்கள். நீங்கள் பேசும்போது கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்து இன்றைக்கே எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே எதிர்க்கட்சி வரிசையில் சொன்னார்கள். அதையேதான் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன் அவர்களும் அதையேதான் சொன்னார். அதையேதான் நீங்கள் உங்கள் தமிழிலே சொல்கிறீர்கள். சரி, சரி.

திரு. ஜி.கே. மணி: அதற்காக மட்டும் இல்லை. எங்கள் கருத்தை நாங்கள் சொல்லவேண்டும்தானே? பதிவு செய்யவேண்டும்தானே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சரி.

திரு. ஜி.கே. மணி: இன்றைக்கு அவசியம் தேவையில்லை. கட்டாயம் இதை ஒத்திவைத்து இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. நீங்கள் அப்போது எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் நிறைவேறிவிட்டது. இப்போது ஆய்வு செய்தல்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.